24th February 1969] [திரு. கே. ஏ. மதியழகன்]

அண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனத்தார் விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகும் செல விற்காக இத்துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கியுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றிச் சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லையென்று கூறி, இவற்றை இம்மன்றம் ஏற்கும்படி வேண்டுகிறேன்.

IV.—PRESENTATION OF THE STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1964-65.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டில் சில மானியங்களின் கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டதாகத் தெரியவந்ததால், அம் மிகைச் செலவினங்களை ஈடு செய்வதற்கான மானிய விவர அறிக்கையை மன்றத்தின் முன் வைக்கவேண்டி முன் வந்துள்ளேன்.

2. இந்த மிகைச் செலவினங்களை ஆய்வு செய்த 1967-68-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர் தமிழ்நாடு அரசுக் கணக்குகள் பற்றிய தங்கள் அறிக்கையின் 16-வது பத்தியில் அவ்வறிக்கையின் 1-ம் இணைப்பில் கண்டுள்ளபடி, மிகைச் செலவி னங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அளிக்கும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக் குக் குழுவினரின் இப் பரிவுரைக் கிணங்க, 1964-65-ம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் மானியக் கோரிக் கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 66.05 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

3. இவை கூறி, 1964-65-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

* **திரு. என். வி. நடராஜன்** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு மாண்பு மிகு கலைஞர் கருணாநிதி அவர்களை முதல்வராகக் கொண்டு அமையப்பெற்றுள்ள அமைச்சரவையை நான் மனமார வரவேற் கிறேன்; பாராட்டுகிறேன். இங்கே எனக்கு மாறுபட்ட கருத்துள்ள வர்களும் மற்றும் ஒரு சிலரும் அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி நீண்டகாலம் நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இந்த ஆட்சியோ விரைவிலேயே முடிந்துவிடும் என்ற